பக்கங்கள் - 08

website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 24 வியாழக்கிழமை (09.04.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 112

## யாழ்.நீராவியடியைச் சேர்ந்த இளம் யுவதி

### பிரான்ஸில் கொரோனாவால் பலி



(பாரீஸ்)
யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளம் யுவதி ஒருவர்

02

## கொரோனா உயிரிழப்பு 7 ஆக உயர்வானது

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது.
கொழும்பு தொற்று நோயியல் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 48 வயதான நபரே நேற்று உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
இதுவரை உயிரிழந்தவர்களின் எண

02

## கொரோனாவுக்கு மருந்து என செறிவான மது அருந்திய

### 600 பேர் ஈரானில் உயிரிழப்பு
### 3 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில்

(தெஹ்ரான்)
கொரோனா வைரஸ் தொற்றுக்கு மருந்து என தவறாக புரிந்துகொண்டு அதிக செறிவான மதுசாரத்தை (அல்கஹோல்) அருந்திய ஈரானை சேர்ந்த 600க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

02

# அதிகளவானோருக்கு யாழில் பாஸ் அனுமதி

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அதிருப்தி

### இறுக்கமான கட்டுப்பாடுகளை கடைப்பிடிக்குமாறும் வலியுறுத்து

*(யாழ்ப்பாணம்)*
*யாழில் அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனையோருக்கு அதிகளவான பாஸ் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது*
*கொரோனா வைரஸை கட்டுப்படுத்த இறுக்கமான நடைமுறையை கடைப்பிடிக்குமாறும் வலியுறுத்தியுள்ளது.*

*(02ஆம் பக்கம் பார்க்க)*

கொரோனா தொடர்பில்


## வதந்தி பரப்பிய இருவர் கைது

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தொடர்பில் சமூக ஊடகங்களில் வதந்தி பரப்பிய குற்றச்சாட்டில் இரண்டு பேர் குற்ற விசாரணைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
35 மற்றும் 43 வயதுடையவர்களே இவ்வாறு

02

திருநெல்வேலியில் உள்ள

## வர்த்தக நிலையத்தில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் திருநெல்வேலியிலுள்ள வர்த்தக

02

## மின்னல் தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)
வவுனியா நாகர் இலுப்பைக்குளம் பகுதியில் மின்னல் தாக்கத்துக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.
குறித்த நபர் நேற்று

02

## யாழில் புத்தாண்டு வரை ஊரடங்கு தொடர்ந்து அமுல்

(கொழும்பு)
யாழில் புத்தாண்டு வரை ஊரடங்கு தொடர்ந்து அமுல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,
கொரோனா தொற்று பரவலை கவனத்திற்கொள்ளும் போது இடர் வலயங்களாக இனம் காணப்பட்டுள்ள கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தற்போது அமுலில் இருக்கும் ஊரடங்குச் சட்டம் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் அமுலில் இருக்கும்.

02

முன்னெடுக்கப்பட்ட திட்டங்கள் தளர்வடைந்தால்

## கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் எச்சரிக்கை

(கொழும்பு)
நாட்டில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்றிட்டங்கள் தளர்வடைந்தால் கொரோனா தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகரிக்

02

மேலும் மூவருக்கு கொரோனா

## தொற்றுக்குள்ளானவர்கள் 188 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிய மேலும் மூன்று பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார

02

## வைரஸ் தொற்று தொடர்பில் பொறுப்பற்று நடந்ததற்காக

### நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டவரே கொரோனாவால் நேற்று உயிரிழந்துள்ளார்

(கொழும்பு)
கொரோனா வைரஸ் தாக்கத்தால் நேற்று இலங்கையில் ஏழாவது நபர் உயிரி

02

## தமிழக இளைஞன் யாழில் மரணம்

(யாழ்ப்பாணம்)
இந்தியாவின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்

02

## யாழில் புதிய தொற்றாளர்கள் இனங்காணப்படவில்லை

### பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி

(யாழ்ப்பாணம்)
புதிதாக கொரோனா தொற்றுக்குள்ளானவர்கள் எவரும் அடையாளப்படுத்தப்படவில்லை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின்

02

## யாழ்.நீராவியடி...

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக பிரான்ஸில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் நீராவியடிப் பகுதியைச் சேர்ந்த உமாசுதன் சாம்பவி (வயது-31) என்பவரே கொரோனா வைரஸ் காரணமாக உயிரிழந்தவராவார்.

தாய், தந்தை இல்லாத நிலையில், திருமணம் செய்து பிரான்ஸ் க்ரீட்டில் (Créteil) பகுதியில் வசித்து வந்த நிலையிலேயே குறித்த யுவதி கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக உயிரிழந்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அண்மைக் காலமாக கொரோனா வைரஸ் தொற்றினால் இளவயது மரணங்களும் அதிகரித்துள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,114)

## மின்னல் தாக்கி...

மாலை தனது வீட்டு முற்றத்தில் நின்றிருந்த சமயம் மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளார்.

இந்நிலையில் உடனடியாக அவர் அவசர அம்புலன்ஸ் மூலம் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் முன்னமே அவர் மரணமடைந்துள்ளதாக வைத்தியசாலையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் எஸ்.மங்களேஸ்வரன் என்ற ஒரு பிள்ளையின் தந்தையே மரணமடைந்துள்ளார்.

அத்துடன் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தின் பாடசாலை கட்டிடமும் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,250,299)

## யாழில் புத்தா...

ஏனைய அனைத்து மாவட்டங்களிலும் அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் இன்று (ஏப்ரல் 09) காலை 6.00 மணிக்கு தளர்த்தப்பட்டு அன்றைய தினம் பிற்பகல் 04.00 மணிக்கு மீண்டும் அமுல்படுத்தப்படும்.

இம்மாவட்டங்களில் மீண்டும் அமுல்படுத்தப்படும் ஊரடங்கு சட்டம் ஏப்ரல் 14 செவ்வாய் காலை 06.00 மணிக்கு நீக்கப்பட்டு அன்றைய தினம் மாலை 04.00 மணி முதல் மீண்டும் அமுல்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் பரவுவதை தடுப்பதற்காக பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படும் சிரமங்களை தெளிவுடனும் பொறுப்புடனும் பொறுத்துக் கொள்ளுமாறு அரசாங்கம் மக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

மேலும் புத்தாண்டு காலப்பகுதியில் சம்பிரதாயங்கள் மற்றும் தொடர்புகளை குடும்ப உறுப்பினர்களுடன் மட்டுமே மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும் வேண்டிக் கொள்ளப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த ஏனைய பணிகளுக்காக மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்து முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகளை வினைத்திறனாக பேணும் வகையில் நடைமுறையில் உள்ள முறைமைகளை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள காலப் பகுதியில் மக்களுக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மற்றும் வேறு பொருட்களை வீடுகளில் இருந்தே பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் தொடர்ச்சியாக வழங்கலை மேற்கொள்ள அரசாங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

எந்த மாவட்டத்திலாயினும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் சிறு தேயிலை தோட்டங்கள், ஏற்றுமதி பயிர்கள் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட மக்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு, கண்டி மற்றும் களுத்துறை மாவட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாக குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்கள் தொடர்ந்தும் தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களாகவே கருதப்படும்.

எவரும் இந்த கிராமங்களுக்கு உள்வருவதோ அல்லது வெளியேறுவதோ மறு அறிவித்தல் வரை முழுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வதந்தி பரப்பிய...

கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் வகையில் கோவிட் - 19 கொரோனா வைரஸ் தொடர்பாக சமூக ஊடகங்கள் மற்றும் ஏனைய டிஜிட்டல் ஊடகங்களின் மூலம் மக்களை தவறான வழியில் இட்டுச்செல்லும் வகையில் வதந்திகளை பரப்பியவர்களுக்கு எதிராக பாதுகாப்பு அமைச்சு சட்ட நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்தப் பணி குற்ற விசாரணைத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கடந்த மார்ச் 10ஆம் திகதி தொடக்கம் தனியார் பல்கலைக்கழக அலுவலர், பெண் ஆசிரியர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

2007ஆம் ஆண்டின் 24 இலக்க கணினி குற்றவியல் சட்டத்தின் கீழ் சமூக ஊடக வலைத்தளங்கள் ஊடக வதந்திகள் மற்றும் தவறான தகவல்களை பரப்பும் நபர்களுக்கு அதிகபட்சம் ஐந்து ஆண்டு சிறைத்தண்டனை வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கொரோனா...

ணிக்கை 07 அதிகரித்துள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக இதுவரை 189 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 44 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்கு சென்றுள்ளனர். (ம-3)

## வர்த்தக நிலை...

நிலையமொன்றிற்குள் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு, உடையார்கட்டை சேர்ந்த சுதாகரன் சுபீகன் (வயது-17) என்ற இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இறப்பு எப்படி நிகழ்ந்தது என்பது தொடர்பான தகவல் வெளியாகாததால் பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3)

## கொரோனாவுக்கு...

மதுசாரத்தை அருந்திய மேலும் 3 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பாக பலரை தாம் கைது செய்துள்ளதாக ஈரான் நீதியமைச்சின் ஊடகப் பேச்சாளர் ஸோலாம் ஹோசேன் தெரிவித்துள்ளார். (ம-3)

## தமிழக இளை...

துள்ளார்.

இந்த சம்பவத்தில் தமிழகத்தின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த வீரபுத்திரன் மணி (வயது-36) என்ற குடும்பத் தலைவரே உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்தியாவின் திண்டுக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த குறித்த குடும்பத் தலைவர் இணுவில் பகுதியில் தங்கி இருந்துள்ளார்.

இந்நிலையில் அவருக்கு தலையில் கட்டி உள்ளதாக கூறி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கடந்த 7 நாட்களுக்கு முன்னர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன்போதே அவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். இது தொடர்பான விசாரணைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. (ம-3,9)

## அதிகளவானோ...

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வட மாகாண இணைப்பாளர் த.காண்டீபன் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சுகாதார மருத்துவ அதிகாரியும் ஊரடங்கு நேரத்தில் மாவட்ட எல்லை களினை தாண்டி பயணிக்க 300 மேற்பட்டவர்களுக்கு ஒரே நாளில் சான்றிதழ்களை வழங்குகின்றனர். அவை அத்தியாவசிய சேவைகளுக்குரித்தான அரச உத்தியோகத்தர்கள் அல்ல.

பெரும்பாலானவர்கள் மக்களுக்கு அத்தியாவசிய பொருட்களை வழங்குவதாக கூறுபவர்கள்.

யாழ்ப்பாணத்தில் மொத்தம் 14 சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகள் (MOH) உள்ளன. மொத்தம் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இவ்வாறு மாவட்ட எல்லையை கடக்க அனுமதிக்கப்படுகின்றனர்.

சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 2 ஆயிரம் நபர்கள் தவிர, மற்றவர்கள் அனைவரும் இப்போது பிரதேச செயலகத்தின் கடிதம் காரணமாக சுகாதார மருத்துவ அதிகாரிகளினால் சான்றிதழை வழங்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இதனைச் சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டும். மாவட்டச் செயலாளர் மற்றும் மாகாண சுகாதார பணிப்பாளர் இருவரும் இணைந்து இதனை கட்டுப்படுத்த தேவையான ஒழுங்குமுறையை ஏற்படுத்த வேண்டும்.

மாகாண ஆளுநர், சம்பந்தப்பட்ட தரப்பினர் இது தொடர்பில் இறுக்கமான விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதனை உறுதிப்படுத்த வேண்டும் என்று வினயமாக கேட்டுக் கொள்கிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## வைரஸ் தொற்று...

முந்தார். உயிரிழந்தவர் கொழும்பு மவுண்ட்லவனியாவை சேர்ந்த உம்ரித் ஹாஜியார் (வயது-48). களுத்துறை மாவட்டம் மக்கொனையை சேர்ந்த இவர், தற்போது கொழும்பில் வசித்து வந்தவர்.

இவர் பிரபலமான இரத்தினக்கல் வியாபாரியாவார்.

கொறொனா அச்சம் இலங்கையில் ஆரம்பித்த பின்னர், தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் மவுண்ட்லவனியா நீதிமன்றத்தில் தம்பதியினர் மீது பொலிஸார் வழக்கு தாக்கல் செய்திருந்தனர். அந்த நபரே நேற்று உயிரிழந்துள்ளார்.

அண்மையில் ஜேர்மனிக்கு சென்று வந்த இவரது நண்பரொருவர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டது உறுதியானதையடுத்து, இவரை வீட்டுத் தனிமையில் இருக்க அறிவுறுத்தப்பட்டிருந்தார். எனினும், அதை அவர் பொருட்படுத்தவில்லை.

தனியார் வைத்தியசாலையில் பரிசோதனைக்கு சென்றிருந்தார்.

இந்த தகவல் தெரிய வந்ததும் சுகாதாரத் துறை அதிகாரிகளும் புலனாய்வு பிரிவினரும் இவரை அடையாளம் காண பகீரத பிரயத்தனம் செய்தனர். பெரு முயற்சியின் பின்னரே தம்பதியினர் அடையாளம் காணப்பட்டனர்.

கொரோனா தொற்றுடன் பொறுப்பற்று திரிந்த இவர்கள் மீது மவுண்ட் லவனியா நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததாக, பொலிஸ் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்திருந்தார்.

மார்ச் 2வது வாரத்தில் அவர் ஐ.டி.எச் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். தற்போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-3)

## கொரோனா தொற்றா...

கக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து தெளிவுபடுத்தும்போதே சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தளர்வடைந்தால் தொற்றுக்குள்ளானோர் எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும்.

எனினும் எம்மால் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தளர்வடையவில்லை என்றால் இலங்கையில் அதிகளவான நோயாளர்கள் இனங்காணப்படுவார்கள் என்று நாம் எண்ணவில்லை.

நாம் அவதானித்ததன்படி இத்தாலியிருந்து வருகை தந்தவர்களினால் ஏற்பட்ட பிரச்சினை தற்போது இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இதேவேளை இந்தோனேஷியா, டுபாய் மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலிருந்து வந்தவர்களில் தொற்றுக்கு உள்ளானோர் மற்றும் அவர்களுடன் பழகியவர்களே தற்போது இனங்காணப்பட்டு வருகின்றனர்.

நோயாளர்களை இனங்காண்பதற்காக முன்னெடுக்கப்படும் பரிசோதனை நடவடிக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு வருகிறது.

அவ்வாறு அதிகரிக்கப்படும் அளவிற்கேற்ப நோயாளர்கள் இனங்காணப்படுவார்கள். இது சிறந்த முறையாகும். உண்மையில் பரிசோதனைகளின் அளவை அதிகரிக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

இலக்கு வைக்கப்பட்டுள்ள குறித்தவொரு குழுவினை இனங்காணுவதற்காக பரிசோதனைகளின் அளவை அதிகரிக்க வேண்டியது அவசியமாகிறது.

தற்போதுள்ள நிலைவரத்துக்கு அமைய நாட்டில் மிக மோசமான நிலைமை ஏற்படவில்லை. எனினும் முன்னெடுக்கப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தளர்வடைந்தால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்பதை மீண்டும் கூறுகின்றேன்.

அதன் காரணமாகவே நாம் தொடர்ந்தும் வலியுறுத்தும் சமூக இடைவெளி தொடர்பில் மக்கள் அனைவரும் அவதானத்தில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். (ம-3)


# வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532


## தொற்றுக்குள்...

அமைச்சு அறிவித்துள்ளது.

இதையடுத்து, தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 185 இலிருந்து 188 ஆக அதிகரித்துள்ளது. தற்போது, 140 நோயாளிகள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

## யாழில் புதிய...

பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றைய தினம் மொத்தமாக 22 பேருக்கு கொரோனாத் தொற்றுக்கான ஆய்வு கூடப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இந் நிலையில் அவர்களனைவருக்கும் தொற்றில்லையென உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இருவருக்கும், பருத்தித்துறைப் பகுதியைச் சேர்ந்த இருவருக்கும், வவுனியா பகுதியைச் சேர்ந்த எட்டுப் பேருக்கும் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த பத்துப் பேருக்கும் நேற்றைய தினம் நடத்தப்பட்ட ஆய்வுகூடப் பரிசோதனைகள் இதனை உறுதி செய்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3,18)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2020 இல் பதிவேற்றம் செய்யப்பட்டது.

# இலங்கையிலுள்ள சகலருக்கும் கொரோனா தொற்றுப் பரிசோதனை

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)


இலங்கையிலிருக்கும் சகலருக்கும் கொரோனா வைரஸ் தொற்றுப் பரிசோதனையை முன்னெடுப்பதற்கு, அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில், ஏற்றுக்கொள்ளக் கூடிய முறைமையைத் தயாரிப்பதற்காக, பிரதிச் சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் அமல் ஹர்ஷ டீ சில்வா தலைமையிலான நால்வர் அடங்கிய குழுவொன்றையும் சுகாதார அமைச்சு நியமித்துள்ளது.

சிறு சிறு குழுக்களின் ஊடாக, முழு நாட்டு மக்களையும் பரிசோதனைக்கு உட்படுத்தும் முறைமையைத் தயாரிக்குமாறும், அக்குழுவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சிறு சிறு குழுக்களை அமைத்து, ஜேர்மனியில் இவ்வாறான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றனவென, வைத்திய அமல் ஹர்ஷ டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இலங்கையைப் பொறுத்தவரையில், அரச மற்றும் தனியார் வசம், கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தக்கூடிய இயந்திரங்கள் 50 மட்டுமே உள்ளன என்றும் அவற்றை வைத்துகொண்டு, ஒரு நாளைக்கு 250 பரிசோதனைகளை மட்டுமே முன்னெடுக்க முடியும் என்றும், சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ம-3)




# கொரோனா COVID - 19

## இலங்கையின் நாளாந்த நிலைமை அறிக்கை

| நோய்த் தொற்று சந்தேகத்தில் | தொற்றுக்கு உள்ளானவர்கள் | குணமடைந்தவர்கள் | மரணமடைந்தவர்கள் |
|---|---|---|---|
| 255 | 189 | 044 | 007 |

## உலகளாவிய ரீதியில் நாளாந்த நிலைமை ஒரே பார்வையில்...

| உலகளவில் தொற்றுக்குள்ளானவர்கள் | உலகளவில் குணமடைந்தவர்கள் | உலகளவில் மரணமடைந்தவர்கள் |
|---|---|---|
| 1,496,335 | 319,160 | 87,617 |

| நாடுகள், உலகம் | மொத்த பாதிப்பு | புதிய தொற்றாளர்கள் | மொத்த மரணம் | இன்றைய மரணம் |
|---|---|---|---|---|
| மொத்தம் | 1,496,335 | 65,416 | 87,617 | +5,583 |
| ஐ.அமெரிக்கா | 420,705 | 20,370 | 14,369 | +1528 |
| இத்தாலி | 139,422 | 3,836 | 17,669 | +542 |
| ஸ்பெய்ன் | 146,690 | 4,748 | 14,673 | +628 |
| சீனா | 81,802 | 62 | 3,333 | +2 |
| ஜேர்மனி | 110,698 | 3,035 | 2,192 | +176 |
| பிரான்ஸ் | 112,950 | 3,881 | 10,869 | +541 |
| ஈரான் | 64,586 | 1,992 | 3,993 | +121 |
| ஐ.இராச்சியம் | 60,733 | 5,491 | 7,097 | +938 |
| இந்தியா | 5,916 | 556 | 178 | +18 |

இன்று அதிகாலை 1.10 நிலைவரப்படி

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுடைய நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அத்தியாவசியப் பொருட்களை அறாவிலைக்கு விற்காதீர்கள்

இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டர் ஒரு நாள் தன் படைத் தளபதியை அழைக்கின்றார்.

நாளை என்னுயிர் பிரிந்து விடும். என் உயிரற்ற உடலை மயானத்துக்கு எடுத்துச் செல்லும்போது எனது இரண்டு கைகளும் வெளியில் தெரியக்கூடியதாக எடுத்துச் செல்லுங்கள் என்றார்.

நிலைமையைப் புரிந்து கொள்ள முடியாத தளபதி ஏன் மன்னா? என்று வினவுகின்றார்.

அதற்கு மகா அலெக்சாண்டர்; இந்த உலகம் முழுவதையும் ஆண்ட மகா அலெக்சாண்டரும் போகும்போது வெறுங்கையோடுதான் போகிறார் என்பதை இனியேனும் இந்த உலகம் புரிந்து கொள்ளட்டும் என்கிறார்.

மகா அலெக்சாண்டர் கூறியதையே பட்டினத்தடிகள்

காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே என்கிறார்.

இப்போது அந்தத் தத்துவம் உணர்த்தப்படுகிறது.

அண்மையில் ஒரு முகநூல் பதிவைப் பார்க்க நேர்ந்தது. அதில் நாங்கள் வாங்கி வைத்திருக்கின்ற அரிசி வயிற்றுக்கா வாய்க்கா என்பதை கொரோனாதான் தீர்மானிக்கும் என எழுதப்பட்டிருந்தது.

ஆம், நிலையாமை எனும் ஒரு பெரும் நிஜத்தை வாழும் மானிடத்துக்கு கொரோனா வைரஸ் எடுத்துரைக்கிறது.

இந்த உலகத்தை ஆட்டிப் படைக்கும் வல்லமையும் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும் அணுக்குண்டுகளையும் தம் வசம் வைத்திருக்கின்ற நாடுகள் இப்போது தன் நாட்டு மக்களைக் காப்பாற்ற முடியாமல் இரண்டு இலட்சம் பேர் நம் நாட்டில் மரணிப்பர் என ஆருடம் கூறுகின்றன எனும்போது, நிலைமை எப்படி என்பது உணர்தற்குரியது.

இது மட்டுமல்ல இத்தாலி தேசத்துத் தனவந்தர்கள் தங்களிடம் இருக்கின்ற பணத்தை வீதிகளில் கொட்டி விட்டு, இந்தப் பணத்தால் எங்கள் குடும்ப உறவுகளைக் காப்பாற்ற முடியவில்லை. பின்பு இது எதற்காக எம்மிடம் இருக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

ஆக, வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது

என்ற வள்ளுவம் இறைபரம்பொருளின் ஆட்சியை நமக்குக் காட்டி நிற்கின்றது.

அன்புக்குரிய எம் வர்த்தகப் பெருமக்களே நீங்கள் வழங்குகின்ற சேவை அளப்பரியது. உயிர்காக்கும் உத்தமப் பணி அது.

இருந்தும் அரிசி, கோதுமை மா போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் நடைமுறை விலைகள் அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளதாகப் பலரும் குற்றம் சாட்டுகின்றனர்.

இத்தகைய நிலைமைகளை வர்த்தகப் பெருமக்களாகிய நீங்கள் முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

எங்கள் மண்ணில் தனிநபர்களும் பொது அமைப்புகளும் புலம்பெயர் உறவுகளும் சமய நிறுவனங்களும் செய்து வருகின்ற இடர்கால உதவிகள் கண்டு நெகிழ்ந்திருக்கின்ற இந்த வேளையில்,

அவர்களின் அறப் பணியை போற்ற வேண்டிய நாம், அறாவிலையில் பொருட்களை விற்பனை செய்வது எந்த வகையிலும் தர்மம் ஆகாது என்ற உண்மையை உணர்ந்து செயற்படுவோமாக.

# வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்ய விவசாயப் போதனாசிரியர்கள், உதவியாளர்கள் உடன் சேவை நிலையத்திற்குச் செல்லுங்கள்

### வடக்கு அமைச்சின் செயலாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி செயலகத்தால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்தின் அடிப்படையில் விவசாய அமைச்சிற்குரிய செயற்பாடுகள் அத்தியாவசிய சேவையாக முக்கியப்படுத்தப்பட்டுள்ளமையாலும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 03/2020 'சுபீட்சம்' சுற்றுநிருபத்திற்கு அமைய வீட்டுத்தோட்டங்களை அபிவருத்தி செய்யும் துரித வேலைத்திட்டத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனைகளை வழங்க வேண்டியுள்ளமையால் வடமாகாண விவசாயத் திணைக்களத்தின் கீழ்கடைமையாற்றும் விவசாயப் போதனாசிரியர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள்(விவசாய விரிவாக்கம்) அனைவரும் தங்களது சேவை நிலையத்திற்கு உடனடியாகச் சென்று கடமையாற்றுமாறு கேட்டுக் கொள்வதுடன் கொரோனா நோய்த்தொற்றிலிருந்து பாதுகாப்பினைப் பெறுவதற்காக சுகாதாரத் துறையினரால் விடுக்கப்பட்ட சுயபாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்றிக் கடமையாற்றுமாறும் கேட்டுக் கொள்கிறேன் என வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அ.சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார்.

மேலும், தமது சொந்த மாவட்டங்களில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அலுவலக அடையாள அட்டையைப் பயன்படுத்தி கடமைக்குச் செல்ல முடியும் என்பதுடன் வெளிமாவட்டங்களில் கடமையாற்றும் அலுவலகர்களுக்கான பிரயாண அனுமதியை மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் தேவைப்படுபவர்கள் வடமாகாண விவசாய அமைச்சு அலுவலகத்துடன் அல்லது மாகாண விவசாயத் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (இ)

## 3 பாடசாலைகளில் திருட்டு

(கரணவாய்)

கரவெட்டியிலுள்ள மூன்று பாடசாலைகளில் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருந்த (நேற்று முன்தினம்) காலப் பகுதியில் திருட்டு இடம்பெற்றது.

ஒலி பெருக்கி, கணனி, மோட்டர் உள்ளிட்ட பொருட்கள் இவ்வாறு திருடப்பட்டன.

நெல்லியடி பொலிஸ் பிரிவில் தொடர்ச்சியாக திருட்டுக்கள் இடம்பெற்று வருவதாக மக்கள் சுட்டிக்காட்டினர். (இ-60)

## இளைஞன் திடீர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-கோட்டைக்காடு பகுதியில் திடீர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட இளைஞனை உரிய நேரத்திற்குள் வைத்தியசாலையில் அனுமதிக்க சுகாதாரத்துறையினர் ஒத்துழைக்கத் தவறியதால் அவ் இளைஞன் உயிரிழந்தார்.

கடந்த 5 ஆம் திகதி அராலி மத்தி- வட்டுக்கோட்டை கோட்டைக்காடு பகுதியைச் சேர்ந்த (வயது-30) நா. புஸ்பராசா என்ற இளைஞன் திடீர் உடல்நலக்குறைவால் உயிரிழந்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்த நிலையில் அவருக்கு திடீர் உடல் நலக்குறைவு ஏற்பட்டது.

இதனையடுத்து அயலவர்கள் அவசர அழைப்பு (1990) அம்புலன்ஸ் சேவைக்கு அழைப்பை ஏற்படுத்திய நிலையில் கொரோனா வைரஸ் தொற்று சூழ்நிலை காரணமாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் உறுதிப்படுத்தினால் தான் நோயாளரை வைத்தியசாலையில் சேர்க்க முடியும் என்று தெரிவித்தனர்.

பின்னர் பொதுச் சுகாதார பரிசோதகருக்கு அறிவித்த நிலையில் சம்பவ இடத்திற்குச் சென்ற பொதுச் சுகாதார பரிசோதகர் மற்றும் சுகாரதார சேவைகள் ஊழியர்கள் நிலைமையை ஆராய்ந்து கொரோனா வைரஸ் தொற்று இல்லை. சாதாரண நோய்தான். பிரதேச வைத்தியசாலையில் மருந்தைப் பெற்று குறித்த இளைஞனுக்கு வழங்குமாறு தெரிவித்தனர்.

இந்நிலையில் இளைஞனின் உடல் நிலை மோசமாகியதை அடுத்து பிரதேச வைத்தியசாலையில் நின்ற அம்புலன்ஸ் மூலமாக குறித்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-114)

## கொரோனாவிற்கு பலியானவர்களின் உடலை வீதிகளில் வீசும் அவலம்



(குயிட்டோ)

ஈக்குவடோர் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் உடல்களை அவர்களின் உறவினர்களே வீதிகளில் வீசும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

தென் அமெரிக்க நாடுகளில் ஒன்றான ஈக்குவடோரில் கடந்த சில நாட்களாக கொரோனா வைரஸ் தொற்றுக்கு ஏராளமானோர் பலியாகி வருகின்றனர். குறிப்பாக,அந்நாட்டின் துறைமுக நகரான குய்யாகு பெரிதும் பாதிப்பட்டது.

இந்நகரில் மட்டும் இதுவரை 150 இற்கும் மேற்பட்டோர் பலியாகினர். ஆயிரத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர்.

கொரோனா தொற்றால் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் வீடுகளை விட்டு வெளியேறத் தடை விதிக்கப்பட்டது. இதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு போதிய மருத்துவ சிகிச்சை கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் நகரில் பலி எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த நிலையில், வீடுகளில் இறந்தவர்களை உடனடியாக கல்லறைக்கு கொண்டு செல்லவும் இயலவில்லை. இறந்தவர்களை முறைப்படி அடக்கம் செய்யவும் முடியவில்லை.

இதனால், கொரோனா வைரஸ் தாக்குதல் காரணமாக இறந்தவர்களை அவர்களது குடும்பத்தினரும், உறவினர்களும் வீதியில் வீசி வருகின்றனர்.

இறந்தவர்கள் உடலை வீட்டின் வாசல் முன்பாக வைத்து அதை ஒரு போர்வையால் போர்த்திவிட்டு உள்ளே போய் விடுகிறார்கள்.

கடந்த 2 நாட்களில் மட்டும், இப்படி வைத்துவிட்டுப் போன 100 உடல்களை நகரதுப்புரவுப் பணியாளர்கள் மீட்டுள்ளனர். இதைவிடக் கொடுமையாக, உள்ளூர் வைத்தியசாலை ஒன்றும் இறந்த ஒருவரின் உடலை வீதியில் வீசியது தெரிய வந்தது.

இதையடுத்து, நகர நிர்வாகம்,'வீடுகளில் இறப்பவர்களின் உடல்களை, தடித்த அட்டைகளைப் பெட்டியா கத் தயாரித்து அதற்குள் அடைத்து வீதியில் வையுங்கள்' என வேண்டுகோள் விடுத்தது.

மேலும், உள்ளூர் வைத்தியசாலைக்கு அதிக உடல்களைச் சேகரித்து வைக்கும் வகையில் 40 அடி நீளம் கொண்ட இரும்புப் பெட்டிகளையும் வழங்கி வருகிறது. (இ)

## உலக அமைதி வேண்டி ஆலயத்தில் யாகம்

உலக அமைதி வேண்டி கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் நேற்று முன்தினம் கரைச்சி பிரதேச சபையின் ஏற்பாட்டில் விசேட யாகம் இடம்பெற்றது.

கொடிய கொரோனா வைரஸ் தாக்கத்தால் இந்த உலகம் அமைதியின்றி இருக்கிறது. இந்தக் கொடூரத் தாக்கத்திலிருந்து உலகம் மிக விரைவாக விடுதலை பெற்று மக்களுக்கு சாந்தியும் சமாதானமும் கிடைக்க வேண்டும் எனக் குறித்த யாகம் இடம்பெற்றது.

குறித்த யாகப் பூஜையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், கரைச்சி பிரதேச சபையின் உறுப்பினர்கள் ஆலய அறங்காவலர் சபையினர் ஆகியோர் கலந்து கொண்டனர். (இ)





## புத்தளத்தில் ஒருவருக்கு கொரோனா உறுதி

# மன்னார் தாராபுரம் முற்றாக முடக்கம்!

## இராணுவத்தினர், பொலிஸார் குவிப்பு மக்கள் அச்சப்படத் தேவையில்லை



(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள தாராபுரம் கிராமம் நேற்றுப் புதன் கிழமை அதிகாலை முதல் எதிர்வரும் ஒரு வாரத்திற்கு முழுமையாக முடக்கப்படுவதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த மாதம் 18 ஆம் திகதி மன்னார் தாராபுரம் கிராமத்தில் இடம்பெற்ற மரணச்சடங்கு ஒன்றில் கலந்து கொண்டு விட்டு புத்தளத்திற்குச் சென்ற ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றிருப்பது உறுதி செய்யப்பட்டது.





குறித்த நபர் நோய் ஏற்பட்டு வைத்தியசாலைக்குச் செல்லவில்லை. குறித்த நபர் கடந்த 15 ஆம் திகதி இந்தோனேசியாவிலி ருந்து இலங்கைக்கு வந்திருந்தார்.

அதற்குப் பின் 18 ஆம் திகதி மன்னார் தாராபுரம் கிராமத்திற்கு வந்து மரணச்சடங்கில் கலந்து கொண்டுவிட்டு மீண்டும் புத்தளத்திற்குச் சென்றுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபர் புத்தளத்தில் இரண்டு வாரங்கள் தனிமைப் படுத்தப்பட்டிருந்தார். பின்னர் அவருக்குப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் போது அவர் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றிற்குள்ளாகியுள்ளமை தெரியவந்தது.

இந்நிலையில் அவரது குடும்பத்தினர் உடனடியாக மன்னாரிலுள்ள உறவினர்களுக்கும் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து மன்னார் பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர் தாராபுரம் கிராமத்திலுள்ள இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் எதிர்வரும் ஒரு வாரத்திற்கு முடக்க நடவடிக்கை மேற்கொண்டனர்.

குறித்த நபர் கடந்த 18 ஆம் திகதி மன்னாரிற்கு வருகை தந்திருந்தார். அவர் மன்னாரிற்கு வந்து மூன்று வாரங்கள் கடந்த நிலையில் மேலும் ஒரு வாரம் தாராபுரம் கிராம மக்களை முடக்கி வைத்துள்ளோம்.

அவர்களுக்கு நோய் அறிகுறிகள் ஏதும் தென்படுகின்றதா? என்பதை அவதானிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளோம். குறித்த நபர் இங்கு வந்து நின்ற இரண்டு நாள் காலப்பகுதிக்குள் அவருடன் நெருங்கிப் பழகிய இரண்டு குடும்பங்கள் அடையாளம் காணப்பட்டன. அவர்களுக்கு பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

எங்களுடைய நடவடிக்கைகளுக்கு தாராபுரம் கிராம மக்களும்,பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பூரண ஒத்துழைப்பை வழங்கியுள்ளனர்.

முழுமையாக முடக்கப்பட்ட தாராபுரம் கிராமத்திலுள்ள மக்களுக்குத் தேவையான உலர் உணவுப் பொருட்களை விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலக அதிகாரிகளுக்கும் மாவட்டச் செயலக அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் அச்சமடையத் தேவையில்லை.

நோய்த் தொற்றிற்குள்ளாகி அடையாளம் காணப்பட்ட நபர் கடந்த 18 ஆம் திகதி இங்கு வந்துள்ளார்.19 ஆம் திகதி மீண்டும் புத்தளத்திற்குச் சென்றுள்ளார். அவர் தாராபுரம் பகுதியை விட்டு எங்கும் செல்லவில்லை.

மரணச்சடங்கில் குறித்த கிராமத்தைச் சேர்ந்த அதிகளவானவர்கள் கலந்து கொண்டுள்ளனர். இதன் காரணத்தால் குறித்த கிராமம் முடக்கப்பட்டது. இதுவரை எந்தவொரு நபரும் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகவில்லை.

மக்கள் பயப்படவோ அல்லது பதற்றப்படவோ தேவையில்லை என அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிலையில் தாராபுரம் கிராமத்தைச் சுற்றி இராணுவம் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

குறித்த கிராமத்திலிருந்து வெளியே செல்லவும், உள்நுழையவும் அனுமதி மறுக்கப்பட்டது. சுமார் 500 குடும்பங்கள் வரை இவ்வாறு முடக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ,285)

## பொதுத் தேர்தலைப் பிற்போட ஒருபோதும் இடமளிக்க முடியாது

### வாசுதேவ திட்டவட்டம்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தொற்றை முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தவுடன் அடுத்த மாதத்திற்குள் பொதுத் தேர்தல் நடத்தப்படும், ஐக்கிய தேசியக் கட்சியினர் ஐக்கிய மக்கள் சக்தியினர் தற்போதைய நிலைமையைச் சாதகமாகப் பயன்படுத்தி பொதுத்தேர்தலை தொடர்ந்து பிற்போட முயற்சிக்கின்றார்கள். இதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்க முடியாது என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொரோனா வைரஸை ஒழிக்க அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டங்களுக்கு சர்வகட்சி கூட்டத்தில் எதிர்த்தரப்பு அரசியல் கட்சித் தலைவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.

ஆனால், மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு எதிரான முரண்பாடான கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

பாராளுமன்றத்தைக் கூட்டுவதால் தற்போதைய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண முடியாது. கலைக்கப்பட்ட பாராளுமன்றம் மக்களின் விமர்சன ங்களுக்குள்ளானது. இதன் காரணமாகவே ஜனாதிபதி, பாராளுமன்றத்தை விரைவாக கலைத்து மக்கள் தமக்கான அரசாங்கத்தைத் தெரிவு செய்யும் வாய்ப்பை ஏற்படுத்தினார்.

இருப்பினும் பூகோள மட்டத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய கொரோனா வைரஸ் இம்மாதம் இடம்பெறவிருந்த பொதுத்தேர்தலைப் பிற்போட வழிசெய்தது. தற்போதைய நிலைமையை வெற்றி கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

அடுத்த மாதத்திற்குள் பொதுத் தேர்தலை நடத்தும் முயற்சிகளே அதிகம் உள்ளன என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வவுனியாவில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தவர்களை பதிவு செய்ய கோரிக்கை

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திற்கு வருகை தந்து தமது சொந்த மாவட்டங்களுக்கு செல்ல முடியாதுள்ள வெளிமாவட்டத்தவர்களை பிரதேச செயலகங்களில் பதிவு செய்யுமாறு அரசாங்க அதிபர் எஸ்.எம். சமன் பந்துலசேன தெரிவித்தார்.

வவுனியாவில் தங்கியுள்ள வெளிமாவட்டத்தவர்கள் தொடர்பாக அவரிடம் கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வெளிமாவட்டங்களிலிருந்து பல்வேறு தேவைகளின் பொருட்டு பலர் வவுனியாவிற்கு வருகை தந்த நிலையில் ஊரடங்கு உத்தரவு மற்றும் மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் காரணமாக தமது சொந்த மாவட்டத்திற்கு செல்ல முடியாதுள்ளனர்.

இவ்வாறானவர்கள் தமது விபரங்களை வவுனியாவிலுள்ள பிரதேச செயலகங்களில் பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-299)

### அரியாலை ஆராதனையில் கலந்து கொண்ட நிலையில்

## வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8 பேரின் இரத்த மாதிரிகள் பரிசோதனை

(வவுனியா)

யாழில் இடம்பெற்ற சுவிஸ் மதபோதகரின் ஆராதனையில் கலந்து கொண்ட நிலையில் வவுனியாவில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 8 பேரின் இரத்த மாதிரிகள் பெறப்பட்டு கொரோனா தொற்று பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

வவுனியா பொதுச் சுகாதாரத் துறையினரால் நேற்றுக் காலை குறித்த இரத்த மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த மாதம் 15 ஆம் திகதி அரியாலையில் இடம்பெற்ற சுவிஸ் மத போதகரின் ஆராதனையில் கலந்து கொண்ட நிலையில் கொரோனா தொற்று பரிசோதனைக்காக வவுனியா, காத்தான் கோட்டம் பகுதியில் ஒரு குடும்பமும், ஓமந்தை அரச வீட்டுத் திட்டப் பகுதியில் ஒரு குடும்பமும், புளியங்குளம் முத்துமாரி நகர் பகுதியில் 6 குடும்பமும் தனிமைப்படுத்தப்பட்டன.

குறித்த குடும்பங்களிலிருந்து ஆராதனையில் கலந்து கொண்ட 8 பேரின் இரத்த மாதிரிகள் சுகாதாரத் துறையினரால் பெறப்பட்டு கொரோனா தொற்றுள்ளதா ? என்ற பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. (இ-250-299)



## கொடுப்பனவு அதிகரிப்பு

(சாவகச்சேரி)

விவசாயிகளுக்கான மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவு மற்றும் வறுமையிலுள்ள முதியோர்க்கான கொடுப்பனவு என்பன இம்முறை பன்மடங்கு அதிகரித்து வழங்கப்பட்டது.

நான்காம் மாதத்திற்கான ஓய்வூதியமே இவ்வாறு அதிகரித்து அதிகபட்சமாக ஐயாயிரம் ரூபாய் வரையில் வழங்கப்பட்டது.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலைமை காரணமாக முதியவர்கள் மற்றும் விவசாயிகளின் நன்மை கருதியே இவ்வாறு அதிகரித்து வழங்கப்பட்டது. (இ-30)

# ஒரேநாளில் 7000 பேர் பலி! உலகளவில் கொரோனா பாதிப்பு 14 இலட்சத்தைத் தாண்டியது

## 209 நாடுகள் வைரஸ் பிடிக்குள்



(ஜெனிவா)

உலகம் முழுவதும் 14 இலட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இதேவேளை நேற்று முன்தினம் மட்டும் ஒரேநாளில் சுமார் 7000 பேர் உயிரிழந்தனர்.

சீனாவின் ஹூபேய் மாகாணம் வுஹான் நகரில் கடந்த ஆண்டு டிசெம்பரில் கண்டு பிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று தற்போது உலகம் முழுவதும் 209 நாடுகளுக்குப் பரவி மனிதப் பேரழிவை ஏற்படுத்தி வருகிறது.

இதற்கு தடுப்பு மருந்து கண்டு பிடிக்க விஞ்ஞானிகள் தீவிர முயற்சி மேற்கொண்டு வரும் நிலையில் வைரஸ் தாக்குதலின் வீரியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கிறது.கொரோனா வைரஸின் தாக்கம் எப்போது தணியும் என்று கணிக்க முடியாத நிலையும் நீடிக்கிறது.

இந்நிலையில் நேற்றுக் காலை 9 மணி நிலவரப்படி உலகம் முழுவதும் 14 இலட்சத்து 31 ஆயிரத்து 691 பேருக்கு வைரஸ் தாக்கம் உறுதி செய்யப்பட்டது. நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் சுமார் 7000 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 82 ஆயிரத்து 78 ஆக உயர்ந்தது.3 இலட்சத்து 2150 பேர் குணமடைந்தனர்.

வைத்தியசாலைகளில் 10 இலட்சத்து 47 ஆயிரத்து 463 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதில் 47 ஆயிரத்து 894 பேரின் நிலைமை மிகவும் கவலைக்கிடமாகவுள்ளது.

உலகளவில் இத்தாலியில் அதிகளவாக 17 ஆயிரத்து 127 பேர் கொரோனாவுக்குப் பலியாகினர். அதனைத் தொடர்ந்து ஸ்பெயின் அதிக உயிரிழப்பைச் சந்தித்தது. அங்கு 14 ஆயிரத்து 45 பேர் இறந்தனர். நோய்த்தாக்கம் அதிகமுள்ள அமெரிக்காவில் 12 ஆயிரத்து 854 பேர் பலியாகினர். பிரான்ஸில் 10 ஆயிரத்து 328 பேரும் பிரிட்டனில் 6 ஆயிரத்து 159 பேரும் ஈரானில் 3,872 பேரும் சீனாவில் 3,333 பேரும் பலியாகினர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## குணமடைந்த 51 பேருக்கு மீண்டும் கொரோனா பாதிப்பு

### தென்கொரியாவில் அதிர்ச்சி

(சியோல்)

தென்கொரியாவில் குணமடைந்த 51 பேருக்கு மீண்டும் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

தென்கொரியாவின் மிகப் பெரிய நகரங்களில் ஒன்றான டாயிகு கொரோனா தாக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது. இங்குள்ள வைத்தியசாலை ஒன்றில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த 51 பேர் குணமடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டு அண்மையில் வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

பின்னர் அவர்களைத் தனிமைப்படுத்தி கண்காணித்து மருத்துவ பரிசோதனை செய்தபோது மீண்டும் கொரோனா தொற்றிருப்பது தெரிய வந்தது. இதைத் தொடர்ந்து அவர்கள் மறுபடியும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இது தொடர்பில், தென்கொரிய மருத்துவ விஞ்ஞானிகள் கூறும்போது,“இது வியக்க வைக்கும் விடயம். மனித உடலில் பல்லாயிரம் கோடி செல்கள் உள்ளன. இதில் ஏதோ ஒரு செல்லில் கொரோனா வைரஸ் பிரிக்க முடியாதளவிற்கு ஒட்டிக்கொண்டுள்ளது. குணமடைந்தவர்களை கொரோனா மீண்டும் தீவிரமாகத் தாக்க வாய்ப்புள்ளது” என எச்சரித்தனர்.

இதேவேளை, இங்கிலாந்தின் ஈஸ்ட் ஆங்கிலியா பல்கலைக்கழகத்தின் தொற்றுநோய்த் துறை பேராசிரியர் பால் ஹண்ட் கூறுகையில், “இதில் பரிசோதனை முறைகள் தவறாக கையாளப்பட்டு இருக்கவேண்டும். அதனால்தான் இது நடந்துள்ளது. என்னைப் பொருத்துவரை குணமடைந்தவரை மறுமுறை கொரோனா தாக்க வாய்ப்பில்லை” எனத் தெரிவித்தார். (இ)



## முகக்கவசம், நாணயத்தாள்களில் கொரோனா வைரஸ் எவ்வளவு காலம் உயிர்வாழும்?

(வோஷிங்டன்)

முகக்கவசம், நாணயத்தாள்களில் கொரோனா வைரஸ் எவ்வளவு காலம் உயிர்வாழும் என்பதை விஞ்ஞானிகள் கண்டறிந்தனர்.

கொரோனா வைரஸ், முகக்கவசங்களில் 7 நாட்கள் வரையும் நாணயத்தாள்களில், சில்வர் மற்றும் பிளாஸ்ரிக் பொருட்களில் சில நாட்கள் வரையும் உயிர் வாழும் என ஹொங்கொங் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வில் தெரியவந்ததாக பிரபல மருத்துவ இதழான த லேன்செட் (The Lancet) தெரிவித்தது.

அதேவேளை வீடுகளில் சாதாரணமாகப் பயன்படுத்தப்படும் கிருமி நாசினிகள், பிளீச் அல்லது சோப் உபயோகித்து கொரோனா வைரஸை கொன்று விடலாம் எனவும் அந்த ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது.

அச்சடித்த காகிதம், டிஷ்யூ பேப்பர் ஆகியவற்றில் கொரோனா வைரஸ் 3 மணி நேரத்திற்கு குறைவாகவும், மரப்பலகை, மற்றும் துணிகளில் 2 நாட்களுக்கும் அது உயிரோடு இருக்க வாய்ப்புள்ளதாகவும் இந்த ஆய்வை நடத்திய லியோ பூன் லிட்மேன், மாலிக் பீரிஸ் என்ற இரு விஞ்ஞானிகள் தெரிவித்தனர். எனவே முகக்கவசம் அணிபவர்கள் அதன் வெளிப்புறத்தைத் தொடாமல் இருப்பது மிகவும் முக்கியம் எனவும் அவர்கள் அறிவுறுத்தினர்.

கடந்த மாதம் வெளியிடப்பட்ட கொரோனா வைரஸின் சுற்றுச்சூழல் ஸ்திரத்தன்மை குறித்து அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில்,

பிளாஸ்ரிக் மற்றும் எஃகு ஆகியவற்றில் 72 மணி நேரம் வரை வைரஸ் இருப்பதை அவர்கள் கண்டறிந்தனர், ஆனால் தாமிரத்தில் நான்கு மணி நேரத்திற்கும் அல்லது அட்டைப் பெட்டியில் 24 மணி நேரத்திற்கும் மேலாக நீடிக்கவில்லை. மேலும் மளிகைப் பொருட்கள் போன்ற பொருட்களை தங்கள் வீடுகளுக்கு கொண்டு செல்லும்போது மக்கள் எவ் வகையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றால் கை கழுவுதல் பட்டியலில் முதலிடத்திலுள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## இந்தியாவில் கொரோனா பாதிப்பு ஐந்து ஆயிரத்தைத் தாண்டியது

### 149 பேர் உயிரிழப்பு

(டில்லி)

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை ஐந்து ஆயிரத்தைத் தாண்டியது. 149 பேர் உயிரிழந்தனர்.

இந்தியாவிலும் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வருகிறது. குறிப்பாக கடந்த சில தினங்களாக கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்தது.

சமூகத் தொற்றைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டது. அடுத்த இரண்டு வாரங்கள் மிகவும் கடினமான வாரங்கள். இதைக் கடந்து விட்டால் மிகப்பெரியளவில் பாதிப்பு இருக்காது என நிபுணர்கள் கணித்துள்ளனர்.

இந்நிலையில் மத்திய சுகாதாரத்துறை நேற்றுக்காலை 8 மணியளவில் வெளியிட்ட தகவலின்படி, இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 194 ஆக உயர்ந்தது. கடந்த 24 மணித்தியாலங்களில் மட்டும் 773 புதிய நோயாளிகள் கண்டறியப்பட்டனர். 10 பேர் உயிரிழந்தனர். இதன்மூலம் பலி எண்ணிக்கை 149 ஆக உயர்ந்தது. கொரோனாவால் பாதிக்கப்பட்ட 401 பேர் குணமடைந்தனர்.

கொரோனா பாதிப்பில் மகாராஷ்டிர மாநிலம் முதலிடத்திலுள்ளது. மகாராஷ்டிராவில் 1018 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

தமிழகத்தில் 690 பேருக்கும் டில்லியில் 576 பேருக்கும் கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. (இ)

# அமெரிக்காவில் என்ன நடக்கிறது? ஒரேநாளில் 2000 பேர் உயிரிழப்பு!



**(நியூயோர்க்)**

**அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தாக்கு தலுக்கு இலக்காகி நேற்று முன் தினம் ஒரே நாளில் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.**

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் ஐரோப்பாவைத் தொடர்ந்து அமெரிக்காவில் கோரத்தாண்டவமாடி வருகிறது. அந்நாட்டில் வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரே நாளில் மட்டும் ஆயிரத்து 970 பேர் (சுமார் 2 ஆயிரம்) உயிரிழந்தனர்.

அமெரிக்காவில் நேற்று முன்தினம் புதிதாக 28 ஆயிரத்து 608 பேருக்கு வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது. இத னால் வைரஸ் பரவியவர்களின் எண்ணிக்கை 3 இலட்சத்து 612 ஆக அதிகரித்தது.

உலகளவில் இத்தாலி, ஸ்பெயின் நாடுகளுக்கு அடுத்தபடியாக கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்த நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா (12,854 பேர்) மூன்றாவது இடத்திலுள்ளது. இதனால் அந்நாட்டு மக்கள் மிகுந்த அச்சமடைந்துள்ளனர். (இ)

## சீனாவுக்கு ஆதரவாகச் செயற்படும் உலக சுகாதார அமைப்புக்கு வழங்கும் நிதியை நிறுத்துவோம் - ட்ரம்ப் மிரட்டல்

(வோஷிங்டன்)

உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாக செயற்படுவதாகக் குற்றம்சாட்டிய அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், அந்த அமைப்புக்கு வழங்கும் நிதியுதவியை நிறுத்தப் போவதாக மிரட்டினார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்த முடியாதளவிற்கு வேகமாகப் பரவி வருகிறது.



ஆரம்ப காலத்தில் கொரோனாவின் தீவிரத்தைக் குறைத்து மதிப்பிட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்டிரம்ப், வைரஸ் அசுர வேகத்தில் பரவத் தொடங்கியதும் சுகாதார நடவடிக்கைகளை மேலும் தீவிரப்படுத்தினார். அதேவேளை கொரோனா வைரஸ் மனிதர்கள் மூலம் மனிதர்களுக்குப் பரவும் என்ற விடயத்தை சீனா மறைத்துவிட்டதாகவும் உலக சுகாதார அமைப்பு சீனாவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் ட்ரம்ப் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகிறார்.

உலக சுகாதார அமைப்பின் தாமதமான செயல்கள், உலக நாடுகளுக்கு பல்வேறு பின்விளைவுகளை ஏற்படுத்தி விட்டதாகவும் குற்றம் சாட்டினார்.

இந்நிலையில் வெள்ளை மாளிகையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பின்போது பேசிய ட்ரம்ப், மீண்டும் உலக சுகாதார அமைப்பை கடுமையாகச்சாடினார்.

'உலக சுகாதார அமைப்பு அமெரிக்காவிடமிருந்து ஏராளமான பணத்தைப் பெறுகிறது. பயணத் தடையை நான் விதித்தபோது அவர்கள் விமர்சித்தனர். பயணத் தடைக்கு உடன்படவும் இல்லை. நிறைய விடயங்களில் அவர்கள் தவறாகவே பேசியிருகிறார்கள்.

அவர்கள் சீனாவுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவே தோன்றுகிறது. எனவே உலக சுகாதார அமைப்புக்கு வழங்கும் நிதியை நாங்கள் நிறுத்தப் போகின்றோம்' என ட்ரம்ப் எச்சரித்தார். (,இ)

## பாகிஸ்தானில் புதிதாக 500 பேருக்கு கொரோனா பாதிப்பு 56 பேர் மரணம்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் புதிதாக 500 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இதையடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 4 ஆயிரத்தை நெருங்குகிறது.

மேலும் நேற்று முன்தினம் மட்டும் 4 பேர் பலியானதையடுத்து பலி எண்ணிக்கை 56 ஆக உயர்ந்தது.

அந்நாட்டில் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஒரேநாளில் ஆயிரத்து 400 பேர் பத்தாயிரத்தைக் கடந்த பலி பரிதாப நிலையில் பிரான்ஸ்






(பாரிஸ்)

பிரான்ஸில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு நேற்று முன்தினம் ஒரேநாளில் ஆயிரத்து 417 பேர் உயிரிழந்தனர். இதனால் அந்நாட்டில் கொரோனாவுக்குப் பலியானோர் எண்ணிக்கை பத்தாயிரத்தைக் கடந்தது.

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் தற்போது ஐரோப்பிய நாடுகளைத் திணறடித்து வருகிறது. குறிப்பாக பிரான்ஸில் கொரோனாவின் தாக்கம் தீவிரமடைந்து வருகிறது.

இந்நிலையில் பிரான்ஸில் கொரோனா வைரஸ் தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்தைக் கடந்தது. நேற்றுக்காலை 9 மணி நிலவரப்படி அந்நாட்டில் ஒரு இலட்சத்து 9 ஆயிரத்து 69 பேருக்குக் கொரோனா வைரஸ் பரவியது உறுதியானது. அந்நாட்டில் வைரஸ் தாக்குதல் காரணமாக நேற்று முன்தினம் ஒரேநாளில் மட்டும் ஆயிரத்து 417 பேர் பலியாகினர். இதனால் பிரான்ஸில் கொரோனா தாக்குதலுக்கு உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆயிரத்து 328 ஆக அதிகரித்தது. (இ)

## தமிழகத்தில் மேலும் 69 பேருக்கு கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 690 ஆக உயர்வு



(சென்னை)

தமிழகத்தில் நேற்று மேலும் 69 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 690 ஆக அதிகரித்தது.

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக கொரோனா வைரஸால் பாதிப்படைந்தவர்கள் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதற்கிடையே, தமிழகத்தில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் 621 ஆக இருந்தது.

இந்நிலையில் தமிழகத்தில் நேற்று மேலும் 69 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாதிப்படைந்தோர் எண்ணிக்கை 690 ஆக அதிகரித்தது.

இதேவேளை தமிழகத்தில் பலி எண்ணிக்கை 7 ஆக உயர்ந்தது. (இ)

# கரைவலைக்கு தீ வைப்பு பல இலட்சம் ரூபா நாசம்!



(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு விசமிகளால் கரைவலைக்கு தீ வைத்து எரிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் குறித்த கரைவலை முற்றாக எரிந்து நாசமாகியது.

ஊரடங்கு காலப்பகுதியில் குறித்த கரைவலை எரிக்கப்பட்டமை அக் கிராமமக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியது.

இக் கரைவலையின் பெறுமதி சுமார் 15 இலட்சத்துக்கும் அதிகமென தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாகப் பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. (இ-18)

# ஊரடங்குச் சட்டத்தைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் பெறும் வியாபாரிகள்

## விலை குறைக்கப்பட்ட பொருட்கள் பதுக்கல்

(மன்னார்)

இலங்கை முழுவதும் கொரோனா அச்சம் காரணமாக ஊரடங்குச் சட்டம் அனைத்து மாவட்டங்களிலும் பிறப்பிக்கப்பட்ட நிலையில் அரசாங்கத்தால் விலை நிர்ணயிக்கப்பட்ட சில பொருட்கள் மன்னாரிலுள்ள சில மொத்த வியாபாரிகளால் இன்னும் கொள்ளை லாபம் வைத்து விற்பனை செய்யப்படுகின்றன.

அத்துடன் அரசாங்கத்தால் விலை நிர்ணயிக்கப்பட்ட சில பொருட்களை விற்பனை செய்யாமல் வியாபார நிலையங்களின் களஞ்சியப் பகுதிகளில் பதுக்கி வைத்துள்ளதாகவும் மக்கள் குற்றம்சாட்டினர்.

65 ரூபாய் நிர்ணய விலை அமுல்படுத்தப்பட்ட பருப்பை மன்னாரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 170 ரூபாய்க்கு விற்பனை செய்வதுடன் சட்ட நடைமுறைகளிலிருந்து தப்புவதற்காக "பில்" அதாவது பற்றுச்சீட்டுக்களில் "கட்டை"என்று குறிப்பிட்டு விற்பனை செய்வதாகவும் மக்கள் விசனம் வெளியிட்டனர்.

அதேபோன்று 100 ரூபாய் நிர்ணயிக்கப்பட்ட மீன் ரின் போன்ற அத்தியாவசிய, விலை குறைக்கப்பட்ட பொருட்கள் பதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் குறித்த வியாபாரிகள் பகிரங்கமாக இவ் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும் குறித்த விலை தொடர்பாக கேள்வி எழுப்பும் மக்களுடன் முறையற்ற விதமாக நடந்து கொள்வதாகவும் குற்றம்சாட்டினர்.

எனவே இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடும் வியாபாரிகளுக்கு ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள நேரத்தில் அவர்களுக்கான விற்பனை நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற கொள்வனவு பாஸ் திட்டத்தை நிறுத்தி வைக்கவும் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மாவட்ட அரசாங்க அதிபர், பிரதேச செயலாளர்கள், பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர். (இ-285)

# கொரோனா பரவுவதைத்தடுக்க 7 படிமுறைகளைப் பின்பற்றுக

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுக்க அனைவரும் ஏழு படிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

கைகளை அடிக்கடி முழுமையாகக் கழுவுங்கள் உங்களுடைய வாய், மூக்கு மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்க்கவும்

நீங்கள் இருமும் போது அல்லது தும்மும் போது உங்களுடைய வாயை மடித்த முழங்கை மூலம் அல்லது திசு கடதாசி மூலம் மறைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் திசு கடதாசியை உபயோகித்தால் உடனடியாக அதை மூடிய குப்பைத் தொட்டியினுள் இட்டு உங்கள் கைகளைக் கழுவுங்கள் அல்லது கிருமி நீக்கி திரவத்தைப் பாவியுங்கள்.

சன நெரிசலான இடங்களைத் தவிருங்கள் ,

நீங்கள் நலமில்லாது இருப்பதாக உணர்ந்தால் (காய்ச்சல் மற்றும் சுவாச நோயாளிகள்) வீட்டிலேயே இருங்கள்.

உங்களுக்கு நோயறிகுறிகள் (காய்ச்சல், இருமல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால் மருத்துவ உதவியைப் பெறுங்கள்

சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் மற்றும் உலக சுகாதார ஸ்தாபனம் போன்ற அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் அண்மைய தகவல்களை கொண்டு உங்களை மேம்படுத்திக் கொள்ளுங்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-114)

# முதலீடுகள் 3 மாதங்களுக்கு இடைநிறுத்தம்

## பிரதமர் மகிந்த அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கைப் பிரஜைகள் வெளிநாடுகளில் முதலீடு செய்வது 3 மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டது.

கொரோனா வைரஸ் பரவலையடுத்து உலகின் பொருளாதாரம் சீர்குலைந்திருக்கும் நிலையில் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவின் பெறுமதியும் வீழ்ச்சி கண்டிருக்கிறது.

அதனையடுத்தே இலங்கையர்கள் அமெரிக்க டொலர்களில் வெளிநாட்டு முதலீடுகளைச் செய்வதை 3 மாதகாலத்திற்கு இடைநிறுத்தும் விசேட வர்த்தமானி அறிவித்தலை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டார்.

அதன்படி வெளிநாட்டு முதலீட்டுக் கணக்கைப் பேணும் இலங்கையர்கள் நாட்டிற்குள் இருந்து கொண்டே வெளிநாடுகளில் பங்குச்சந்தை, பிணைமுறிகள் போன்றவற்றில் முதலீடுகளைச் செய்யமுடியும்.

அத்தகைய அனுமதியளிக்கப்பட்ட வங்கிகள், நிறுவனங்கள் ஊடாக இலங்கைப் பிரஜைகள் வெளிநாடுகளில் முதலீடு செய்வது (டொலர்களில்) 3 மாத காலத்திற்கு இடைநிறுத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ)

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் அணிவகுத்து நிற்கும் விமானங்கள்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் தீவிரமடைந்ததையடுத்து உலக நாடுகள் விமான போக்குவரத்துச் சேவைகளை தற்காலிகமாக இடைநிறுத்தின.

இதனையடுத்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமான சேவையும் தமது விமான சேவைகளை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

இந்நிலையில், ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸின் ஏ 330 மற்றும் ஏ 320 வகையைச் சேர்ந்த 25 விமானங்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வரிசையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (இ)

# கொரோனாவை வைத்து அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்கில்லை - விமல்



(கொழும்பு)

கொரோனா வைரஸ் தாக்கத்தால் பாதிக்கப்பட்ட நோயாளர்களைக் கொண்டு அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

நாட்டில் பாரதூரமானதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது. இது போன்ற சந்தர்ப்பத்தில் மக்களுக்கான சேவையில் ஈடுபடுவது எமது கடமையாகும் என்று அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஹோமாகம வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோருக்கு சிகிச்சையளிக்கும் பிரிவிற்கு மருத்துவ உபகரணங்களை வழங்கி வைத்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறுகூறினார் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல்கள் ஆணைக்குழு தான் தற்போது அரசியல் செய்கிறது. ஆணைக்குழுவிலுள்ள உறுப்பினரொருவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இலங்கை ஏகாதிபத்தியத்தை நோக்கிச்செல்வதாகக்கூறினார். அத்தோடு ஆணைக்குழுவின் தலைவர் தூக்கத்திலிருந்து திடீரென எழுந்ததைப் போன்று அரசியல் செய்யக் கூடாதெனக் கூறுகின்றார்.

இங்கு நாம் அரசியல் செய்யவில்லை. கொரோனா தொற்று நோயாளர்களைக் கொண்டு அரசியல் செய்ய வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

இன்று அரசாங்கத்தைச் சார்ந்த கட்சிகளாகட்டும் எதிர்த் தரப்பிலிருக்கும் கட்சிகளாகட்டும் யாராக இருந்தாலும் கட்சி பேதமின்றி சமூகத்திற்கு தலைமைத்துவம் வழங்க வேண்டும்.

அரச அதிகாரிகளால் மாத்திரம் தனியாக இந்த பாரத்தைச் சுமக்க முடியாது. இதனை அரசியல் செய்வதாக தேர்தல்கள் ஆணைக்குழு பார்க்குமானால் முதலில் ஆணைக்குழுவுக்கே மருந்து வழங்க வேண்டும். இங்கு நாம் அரசியல் செய்யவில்லை. சமூக பொறுப்பினையே நிறைவேற்றுகின்றோம்.

கட்சி பேதம் எம்மிடமில்லை. எனவே தேர்தல்கள் ஆணைக்குழு அரசியல் செய்வதை நிறுத்த வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் மறைமுக அரசியல் எமக்கு நன்றாகத் தெரியும். ஆணைக்குழுவின் தலைவர் ஆட்சி மாற்றத்திற்கு முன்னர் செயற்பட்ட விதமும் தற்போது செயற்படுகின்ற விதமும் எமக்குத் தெரியும்.

எனவே, தேர்தல்கள் ஆணைக்குழுத்தலைவர் உள்ளிட்ட அனைவருக்கும் அவர்கள் செய்யும் அரசியலை நிறுத்துமாறு கோருகின்றோம். இவ்வாறு பாரதூரமானதொரு வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள இக்கட்டான சந்தர்ப்பத்தில் மக்களுக்கு உதவ முன்வருவதற்கு எமக்கு அதிகாரம் இல்லை என்றால் அதனை நாம் ஏற்க மாட்டோம். அவ்வாறு முட்டுக்கட்டைபோட யாருக்கும் உரிமை இல்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஊரடங்குச்சட்டத்தின் போது கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு



(கிளிநொச்சி)

ஊரடங்குச் சட்டம் அமுலிலுள்ள காலப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கட்டைக்காடு பகுதியில் வைத்து 620 லீற்றர் கோடாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டு தருமபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர். (இ)

# தொடர்ந்து வீழ்ச்சியடையும் இலங்கை ரூபாவின் பெறுமதி

(கொழும்பு)

வரலாற்றில் முதன் முறையாக அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதியானது மிக மோசமான வீழ்ச்சியைச் சந்தித்தது.

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில் அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 200 ரூபாவைக் கடந்தது.

நேற்றுப் புதன்கிழமை டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 193 ரூபா 95 சதமாகவும் விற்பனை விலை 200 ரூபா 46 சதமாகவும் பதிவாகியது.

கடந்த சில தினங்களாக அமெரிக்க டொலருடன் ஒப்பிடுகையில் இலங்கை ரூபாவின் பெறுமதி தொடர்ந்தும் வீழ்ச்சியடைகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)